16 தினகரன்
திருச்சி 14 மே 2008

# தலைமைத்துவ பயிற்சி முகாம்

கிருஷ்ணராயபுரம், மே 14: கிருஷ்ணராயபுரம் அருகில் அரவணாம்பேட்டையில் உள்ள அரெட்ஸ் பயிற்சி மையத்தில் திருச்சி மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களை சேர்ந்த மேக்ட் வேர்கள் குழந்தைகள் இயக்க பொறுப்பாளர்களுக்கான தலைமைத்துவ பயிற்சி முகாம் மே 1ம் தேதி துவங்கி நேற்று முடிவடைந்தது.

இப்பயிற்சியில் 65க்கும் மேற்பட்ட குழந்தைகள் இயக்க கிளை பிரதிநிதிகள் கலந்து கொண்டு பயிற்சி பெற்றனர். மேக்ட் நிறுவன நிர்வாக இயக்குனர் சிரில் தலைமையில் பயிற்சி நடைபெற்றது. குழந்தைகள் இயக்க செயல்பாடுகள், குழந்தைகள் உரிமைகள், தலைவர், செயலாளர், பொருளாளர் மற்றும் நிர்வாகிகள் பொறுப்பு மற்றும் கடமைகள் என்னென்ன, இயக்கத்தை எப்படி தலைமை வகித்து நடத்தி செல்வது உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது.

குழு விவாதம், பாடல், நாடகங்கள், தனிநபர் செயல்பாடு முறையில் பயிற்சி நடைபெற்றது. மேலும் நீச்சல், தனித்திறன் வளர்ப்பு மற்றும் படைப்பாற்றல் குறித்தும் பயிற்சி அளிக்கப்பட்டது. மேக்ட் நிறுவன நிர்வாக இயக்குனர் சிரில், பயிற்சியாளர் செல்வக்குமார், ஒருங்கிணைப்பாளர் கிளமென்ட், களப் பணியாளர்கள் கரோலின், டெய்சி, போதும் பொண்ணு, சின்னமணி, அன்புச் செல்வி, பீட்டர் ஆகியோர் பயிற்சி அளித்தனர். இதன் நிறைவு விழா வில் மேக்ட் வேர்கள் குழந்தைகள் இயக்க மாவட்ட செயற்குழு நிர்வாகிகள் தேர்வு நடைபெற்றது.

இதில் அரெட்ஸ் நிறுவன இயக்குனர் சாமி சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டார்.